செ.வெ.எண்.31 நாள்:13.10.2021

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட பதிவு அலுவலர்களுக்கான கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள், கெலமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் மரு.ராஜேஸ்குமார் அவர்கள் வடிவமைத்த குழந்தை திருமண தடுப்பு குறித்த விழிப்புணர்வு பதாகையை இன்று (13.10.2021) வெளியிட்டார்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எந்த இடத்தில் குழந்தை திருமணம் நடைபெற்றாலும் அனைத்து அரசு துறை அலுவலர்களும் சமூக அக்கறையுடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்து சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வேண்டுகோள்.**

குழந்தை திருமணம் நடப்பதற்கான காரணங்கள், அதனால் ஏற்படும் சிறுமி தாய் தற்கொலை, குழந்தை பள்ளி இடைநிற்றல், ஊட்டச்சத்து குறைபாடு, இளம் விதவை, குழந்தைக்கு பிறவி குறைபாடுகள், புற்றுநோய், கொத்தடிமை மற்றும் மன அழுத்தம் ஆகிய விளைவுகள் ஏற்படுவதையும், தடுக்கும் வகையில் குழந்தை திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, விழிப்புணர்வு பதாகையில் கூறப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழந்தை திருமணம் தடுப்பு குறித்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் குழந்தை திருமணம் குறித்து பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தை திருமணத்தால் பள்ளி இடைநிற்றல், ஊட்டச்சத்து குறைபாடு, இளம் வயதில் விதவை, குழந்தைக்கு பிறவி குறைபாடுகள், புற்றுநோய், கொத்தடிமை மற்றும் மன அழுத்தம் போன்றவை ஏற்படுகிறது. அனைத்து துறை அலுவலர்களும் எதிர்கால சந்ததியை பாதுகாக்கும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எந்த இடத்தில் குழந்தை திருமணம் நடைபெற்றாலும் சமூக அக்கறையுடன் அதை தடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பி.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், குழந்தைகள் பாதுகாப்பு அலகு மாவட்ட திட்ட அலுவலர் திரு.சரவணன், உனிசெட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மரு.ராஜேஸ்குமார், மரு.வாசுகி, மரு.திலக் உட்பட மருத்துவர்கள், சுகாதார பணியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**